போதை பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பது தொடர்பாக 11.08.2022 அன்று விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக 06.08.2022 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக பணி முன்னேற்றம் குறித்து மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும் கூட்டம்.

நாள்: 10.08.2022
நேரம்: பிற்பகல் 3.30 மணி

| வ.எண். | அலுவலர்கள் மற்றும் பணிகள் விவரம் |
|---|---|
| 1, | **மாவட்ட காவல் கண்காணிப்பாளர்** |
| | ➢ அரசு மற்றும் தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் பயிலும் மாணவ மாணவியரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பாக காவலர் மன்றம்(Police Club) என்ற அமைப்பை உருவாக்கி பல்வேறு விழிப்புணர்வுகளோடு போதைப் பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது.<br><br>➢ பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் மூலம் நடத்தப்படும் விழிப்புணர்வு ஊர்வலங்களுக்கு சாலை போக்குவரத்து தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வது.<br><br>➢ பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு 100 மீட்டர் சுற்றளவில் உள்ள கடைகளில் போதைபொருட்கள் விற்பனை செய்வது தொடர்பாக வரும் புகார்களின் மீது வழக்கு பதிவு செய்து கடும் நடவடிக்கை எடுத்தல் |
| 2, | **மண்டல இணை இயக்குநர் கல்லூரி கல்விகள்.<br>முதன்மை கல்வி அலுவலர். மாவட்ட கல்வி அலுவலர்** |
| | ➢ அனைத்து அரசு மற்றும் தனியார் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி /கல்லூரி மாணவ/மாணவியர்களைக் கொண்டு 11.08.2022 அன்று விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி ஊர்வலம் ஏற்பாடு செய்தல்<br><br>➢ பள்ளிகள்/கல்லூரிகளுக்கு அருகாமையில் (100 மீட்டருக்குட்பட்ட) அமைந்துள்ள கடைகளில் ஹான்ஸ், குட்கா, புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறதா என்பதை ஆய்வு செய்யதல். அவ்வாறான ஆய்வின் போது ஹான்ஸ், குட்கா, புகையிலை பொருட்கள் விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் காவல் துறையினருக்கு இரகசிய தகவல் தெரிவித்தல்<br><br>➢ பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள கடைகளில் "இங்கு போதை விற்கப்படுவதில்லை" என்ற பதாகைகள் வைக்குமாறு சம்பந்தப்பட்ட கடையின் உரிமையாளரிடம் தெரிவிக்க வேண்டியது. பணி முன்னேற்ற அறிக்கை.<br><br>➢ 11.08.22 ஆம் தேதியன்று தொலைக்காட்சி மூலம் அரசால் ஒளிபரப்பும் போதை பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு நேரலையினை மாணவ /மாணவியர்களுக்கு நேரடி ஒளிபரப்பு ஏற்பாடு செய்தல் அல்லது மேற்படி ஒளிபரப்பினை மறு ஒளிபரப்பு செய்ய ஏற்ப்பாடு செய்தல்<br><br>➢ காவல் துறையினரால் ஏற்படுத்தப்பட்டுள்ள காவலர் மன்றங்கள் குறித்த விவரத்தினை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து பெற்று அதனை ஒவ்வொரு பள்ளி தலைமையாசிரியருக்கும் முதன்மை கல்வி அலுவலர்/மாவட்ட |

| | |
|---|---|
| | கல்வி அலுவலர் தெரியப்படுத்த வேண்டியது மற்றும் காவல் துறையினருககு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டியது. |
| 3. | இணை இயக்குநர், மருத்துவப்பணிகள் |
| | ➢ போதைப் பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்து 11.08.2022 அன்று அனைத்து மருத்துவமனைகளிலும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது. புகைப்படங்கள் அனுப்பவேண்டியது.<br><br>➢ மருத்துவ கல்லூரி/செவிலியர் கல்லூரி மாணவர்களைக் கொண்டு 11.08.2022 அன்று அன்று விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி விழிப்புணர்வு ஊர்வலம் ஏற்பாடு செய்தல்<br><br>➢ போதைக்கு அடிமையானவர்களை திருத்துவதற்காக மறுவாழ்வு மையங்களை அணைக்கட்டு வட்டம், பேர்ணாம்பட்டு வட்டம் மற்றும் வேலூர் பென்லேன்ட் அரசு மருத்துவமனையில் ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டது. பணி முன்னேற்ற அறிக்கை.<br><br>➢ வேலூர் மாவட்டத்தில் பதிவு பெற்ற மருந்தகங்களின் விவரத்தினை சமர்பிக்க அறிவுறுத்தப்பட்டது. பணி முன்னேற்ற அறிக்கை..<br><br>➢ மாதத்திற்கு ஒருமுறை மருந்து கட்டுப்பாட்டு அலுவலர், காவல் துறையினர் மற்றும் வருவாய்த் துறையினருடன் இணைந்து மருந்தகங்களை ஆய்வு மேற்கொள்ளுமாறு அறிவுத்தப்பட்டது. இது குறித்து திட்ட அறிக்கை, |
| 4. | மருந்து கட்டுப்பாட்டு அலுவலர் |
| | ➢ மருந்தகங்களில் சோதனை செய்யும்போது மருந்துகள் மருத்துவரின் குறிப்பு இருந்தால் மட்டுமே விற்பனை செய்வதை சம்பந்தப்பட்ட கடையின் உரிமையாளருக்கு தெரிவிக்கவேண்டும் எனவும், அவ்வாறு விற்பனை செய்யும்போது எந்த மருத்துவர் யாருக்கு பரிந்துரை செய்துள்ளார், எந்த விதமான மருந்து, அதன் அளவு ஆகியவற்றை சம்பந்தப்பட்ட மருந்தகங்களில் பதிவு செய்யப்பட்டதை தணிக்கை செய்து அதன் விவரத்தினையும், எந்தெந்த பகுதிகளில் அதிகமாக விற்பனையாகிறது என்ற விவரத்தினையும் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் கூட்டத்தில் சமர்பிக்க வேண்டும்.<br><br>➢ மாவட்டத்தில் உள்ள மருந்து விநியோகம் செய்யும் நிறுவனங்களை திடீர் தணிக்கை செய்து முறைகேடாக விநியோகம் செய்யப்பட்டிருப்பின் அதன் உரிமத்தினை தற்காலிகமாக நிறுத்தி வைக்க அறிவுறுத்தப்பட்டது.<br><br>➢ _மருத்துவரின் குறிப்பு இல்லாமல் மருந்துகளை பொதுமக்களுக்கு விற்பனை செய்யக்கூடாது என்பதை சோதனையின்போது மருந்தகங்களுக்கு தெரிவிக்க வேண்டியது |
| 5. | உணவு பாதுகாப்பு அலுவலர் |
| | ➢ தமிழகத்தில் ஹான்ஸ், குட்கா மற்றும் புகையிலை பொருட்கள் தடைசெய்யப்பட்டவைகளாகும். இது தொடர்பாக கடைகளை ஆய்வு செய்யப்பட வேண்டும்<br><br>➢ ஆய்வின்போது ஹான்ஸ், குட்கா மற்றும் புகையிலை பொருட்கள் கண்டறியப்பட்டால் காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்து வழக்கு பதிவு செய்யப்பட்ட விவரம்.<br><br>➢ தடைசெய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்ததற்காக எத்தனை கடைகள்/விநியோக நிறுவனங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டது என அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் |